Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 15, 2021

புதன்கிழமை செப்டெம்பர் 15, 2021 | ஒளி: 07 கதிர்: 101 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## நாடு நெல் 55 ரூபாய்



2021 சிறுபோக அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகளின் நெல் அறுவடையை போட்டி விலையில் கொள்வனவு செய்யும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

46/1 ஆல் நிறுவப்பட்ட வெளிப்புற முயற்சிகளுக்கான

# முன்மொழிவு நிராகரிப்பு

### ஐ.நாவுக்கு அதிரடியாக அறிவித்தது இலங்கை அரசாங்கம்



- காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது.
- இழப்பீட்டு அலுவலகம் 3,775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது.
- நல்லிணக்கத்துக்கான அலுவலகம் 8 அம்ச செயற்றிட்டத்தைத் தொடர்கின்றது.
- தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது.
- சமாதானம், நீதி, வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பயங்கரவாதத் தடைச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படுகிறது. உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் முன்வைத்த சகல குற்றச்சாட்டுகளையும் முற்றுமுழுதாக நிராகரித்த இலங்கை, தீர்மானம் 46/1 ஆல் நிறுவப்பட்ட சகல வெளிப்புற முயற்சிகளுக்கான முன்மொழிவுகளையும் நிராகரித்தது.

தொடர்ச்சி P2

## கறையற்ற ஒருவரே தற்போதைய தேவை



அரசியல் தலையீடுகளின்றி மத்திய வங்கி இயங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேசம் நம்பிக்கை கொள்கின்ற, கறையற்ற ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அர்ஜென்டீனா, ஹங்கேரி, சிம்பாப்வே போன்ற நாடுகளின் மத்திய வங்கிகள் எடுத்த தவறான தீர்மானங்களால் அந்தந்த நாடுகளுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடாது என்றார்.

தொடர்ச்சி P2

இலங்கை மத்திய வங்கியின்

## 16ஆவது ஆளுநர் 15ஆம் திகதி பதவியேற்பு



இலங்கை மத்திய வங்கியின் 15ஆவது ஆளுநராக கடமையாற்றிய தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் ஓய்வுப்பெற்றத்தை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அஜிட் நிவாட் கப்ரால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், 2006 ஜூலை 1ஆம் திகதி முதல், 2015 ஜூன் 30ஆம் திகதி வரையிலும் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றியிருந்தார். அதன்பின்னர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலின் ஊடாக, பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்தார்.

தனது தேசிய பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அஜிட் நிவாட் கப்ரால்,

தொடர்ச்சி P2

## ஐ.நா, இத்தாலி விஜயங்கள் முக்கியம்

மகேஸ்வரி விஜயனந்தன்

ஜனாதிபதியின் ஐ.நாவுக்கான விஜயமும் பிரதமரின் இத்தாலிக்கான விஜயமும் மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னரான வெளிநாட்டு பயணங்களாகும் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும,அரசாங்கம் பதவியேற்று ஒன்றரை வருடங்களில்

தொடர்ச்சி P2

தனிமைப்படுத்தல் ஊரடங்கு:

## நீடிப்பா? நீக்கமாக விரைவில் முடிவு

மகேஸ்வரி விஜயனந்தன்

நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவால், நாட்டில் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, எனவே இந்த ஊரடங்கு உத்தரவானது இந்த மாதம் 21ஆம் திகதி அதிகாலை வரை அமலில் இருக்கும் என்றார்.

தொடர்ச்சி P2

## கெட்டகொடவுக்கு வெள்ளி நல்லகாலம்



வெற்றிடமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் எம்.பி பதவிக்காக, ஜயந்த கெட்டகொடவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (17) ஆராய்ந்து தீர்மானிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## யாழில் ஞானசார தேரர் சிறப்பு யாகம்

என்.ராஜ்

நாட்டில், கொரோனா தொற்று நிலைமை நீங்க வேண்டி, யாழ்ப்பாணத்தில் சிறப்பு யாகமொன்று, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில், நேற்று (14) நடைபெற்றது.

தொடர்ச்சி P2





## இன்றுமுதல் கடவுச்சீட்டு

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மாத்தறை, கண்டி, குருநாகல், வவுனியா ஆகிய அலுவலகங்களின் செயற்பாடுகள் இன்று (15) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே அக்காரியாலயங்கள் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரையிலும் திறந்திருக்கும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஒரேநாளில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் பத்தரமுல்லையிலுள்ள பிரதான அலுவலகத்தில் மட்டுமே முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# குளத்தின் பாதுகாப்பு சுவருக்கு பூசப்படும் வர்ணத்தால் சர்ச்சை

எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த்

யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மாநகர சபைக்கு சொந்தமான பிள்ளையார் குளத்தைச் சுற்றி, பௌத்த கொடிகளில் காணப்படும் வர்ணங்களை ஒத்தவகையில் நிறம் தீட்டும் செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன், மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்ற பிள்ளையார் குளத்தின் சுற்று கம்பங்களுக்கே, இவ்வாறு பௌத்த கொடிகளில் உள்ள நிறங்களை பொறிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

1996ஆம் ஆண்டு 1.51(0.6063) ஏக்கராக இருந்த இந்தக் குளத்தின் பரப்பளவு 2013ஆம் ஆண்டு மீள அளக்கப்பட்ட போது,

தொடர்ச்சி P2





## 5 சதவீதம் தவறானது

மாதமொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கு அதிகம் மாதாந்த வருமானம் பெறுபவர்களிடம் 5 சதவீத வட்டியை அறிவிடுவது தொடர்பில் நேற்று முன்தினம்(13) நடைபெற்ற அமைச்சரவையில் எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்

தொடர்ச்சி P2

## ஒலிம்பிக் வர்ணம்

எம்.றொசாந்த்



பிள்ளையார் கோவில் குள பாதுகாப்பு சுவருக்கு பூசப்பட்ட வர்ணம் பௌத்த வர்ணம் அல்ல எனத் தெரிவித்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், அது ஒலிம்பிக் வர்ணம் என்று தன்னிடம் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்ததாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2

## வேலைகள் இடைநிறுத்தம்

எம்.றொசாந்த்

யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிள்ளையார் குளத்தை சுற்றி புதிதாக கட்டப்பட்டிருக்கும் பாதுகாப்பு சுவர்களில் வர்ணப் பூச்சு தீட்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வர்ண சர்ச்சை காரணமாக குறித்த குளப் பகுதிக்கு, நேற்று (14) யாழ்.



தொடர்ச்சி P2

# முன்மொழிவு நிராகரிப்பு

மனித உரிமைகள் பேரவை 48வது அமர்வு நேற்று முன்தினம் (13) ஆரம்பதானது. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரால் இலங்கை குறித்த வாய்மொழி அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய போதே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மேற்கண்டவாறு நிராகரித்தார்.

மெய்நிகர் வழியாக உரையாற்றிய அவர், தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க, மனித உரிமை முறைமையினால் கட்டளையிடப்பட்டுள்ள இந்த சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையுடனான எமது வலுவான மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்பை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தனது மண்ணில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஒழித்தது. நாம் எமது மக்களின் நலனுக்காக சமாதானம், பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்துள்ளோம். எமது ஜனநாயக மரபுகளை நாம் உறுதியாகப் பேணி வந்தோம். மிகவும் அண்மையில் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதி, 2020ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல்களில், அதிக அளவிலான வாக்காளர்களின் பங்கேற்புடன் வழக்கமான இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

'குணப்படுத்துதல்' என்ற கண்ணோட்டத்தில் மோதலுக்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகளக் கையாள்கின்றோம். மிகவும் அண்மையில், தீவிரமான பயங்கரவாதக் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 16 விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. மோதலுக்குப் பிந்தைய கண்ணிவெடி அகற்றல், புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களின் வெற்றியானது, தேசிய நல்லிணக்கத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் கொவிட்-19 தொற்றுநோயின் நாளாந்த சவால்கள் இருந்தபோதிலும், உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நான் முன்னிலைப்படுத்துகின்றேன்:

- காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அதன் முக்கிய செயற்பாடாக, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது.
- இழப்பீட்டு அலுவலகம் இந்த ஆண்டு 3,775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது.
- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் அதன் 8 அம்ச செயற்திட்டத்தைத் தொடர்கின்றது.
- தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது.
- நிலையான அபிவிருத்தி இலக்கு 16 இன் கீழான வழிநடத்தல் குழுவொன்று சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வதேச விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கொண்டுவரவும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இம்மாத இறுதியில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், இதுபோன்ற வழக்குகளை விரைவாக சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விரைந்து தீர்ப்பதும் நடைபெற்று வருகின்றது.
- பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கை அடுத்த 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்.
- நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு, நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், ஆதரவைப் பயன்படுத்துவதற்கும் நாங்கள் சிவில் சமூகத்துடன் தீவிரமான ஈடுபாட்டைப் பராமரிக்கின்றோம்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினம் அன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகள் மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து, அனைத்து விதமான சட்ட நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களைப் பாதுகாப்பதிலும் எப்போதும் போல நாம் விழிப்புடன் இருப்போம்.

தீர்மானம் 46/1 ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை நாங்கள் நிராகரிக்கும் அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுகின்றன.

தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும். மனித உரிமைகள் பேரவை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதுடன், அது அரசியல் மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும். குறிப்பாக உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக அவை அவசரமாகத் தேவைப்படும்போது, இந்த முயற்சியில் செலவிடப்பட்ட வளங்கள் தேவையற்றவை.

கொவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய மற்றும் அழுத்தமான சவால்களின் கீழ், சமூக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாக நாங்கள் கருதுகின்றோம். எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாம் வெளிப்படையாக இருக்கின்றோம், பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கமாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான முழு அளவிலான பிரச்சினைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் தனதுரையில் தெரிவித்தார்.

## நாடு நெல் 55 ரூபாய்

அதனடிப்படையில் நாட்டரிசிக்காக ஒரு கிலோகிராம் நெல் 55 ரூபாய்க்கு நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. அவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை அரிசியாக்கி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா, இத்தாலி...

அரசாங்கத்திலுள்ள எந்தவோர் அமைச்சரோ எவ்வித வெளிநாட்டு பயணங்களையும் மேற்கொள்ளாமல் கூடுமானவரை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முக்கிய நிகழ்வுகளில் பங்குபற்றினர் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தத்தமது பாரியாருடன் சென்றுள்ள பயணங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

அத்துடன், கடந்த காலங்களில் அத்தியாவசிய வெளிநாட்டு வருகைகள் மாத்திரமே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, ஜெனீவாவின் மனித உரிமைகள் பேரவையில். இலங்கை பல விமர்சனங்களை எதிர்கொள்ளும் நேரத்தில், பிரதமரின் இத்தாலிக்கான விஜயமும் ஜனாதிபதியின் ஐ.நாவுக்கான விஜயமும் மிகவும் முக்கியமானவை.

எனவே இத்தகைய சந்தர்ப்பத்தில் சிறியளவான குழுக்களுடன் ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொள்வது நாட்டுக்கு எவ்வித பாதகத்தையும் ஏற்படுத்தாது.

அதேபோல், வெளிநாட்டு அமைப்பு ஒன்று விடுத்த வேண்டுகோளுக்கமையவே, பிரதமர் இத்தாலியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக்கொள்ளச் சென்றார். பொருளாதாரத்தின் மீது அதிகம் சுமையை ஏற்படுத்தாமல் இதுபோன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வது அரசின் பொறுப்பு ஆகும்.

அரச நிதியை தவறாகப் பயன்படுத்தி இவ்வாறான பயணங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் எதுவும் இல்லை என்றும் அவ்வாறு இருந்தால் அதை ஊடகங்கள் அம்பலப்படுத்தலாம் என்றார்.

## நீடிப்பா? நீக்கமாக...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பெயரளவில் இருப்பதுடன், இதனால் சிறிய வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எனவே ஊரடங்கு உத்தரவு தொடர்பில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது தொடர்பில் உரிய முறையில் அறிவிக்கப்படும் என தெரிவித்த அவர், ஊரடங்கு உத்தரவை நீக்குவது குறித்து, கொரோனா ஒழிப்பு தொடர்பான செயலணியின் தீர்மானத்துக்கு அமையவே, தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றார்.

எனவே, தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவால் பல பலன்கள் கிடைத்துள்ளன. அதாவது தொற்றாளர்களின் எண்ணிக்கை; அதேபோல் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோல் இந்த மாத இறுதிக்குள் தொற்று தொடர்பான நிலைமையில் பாரிய முன்னேற்றத்தை அனைவரும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை சிறியளவிலான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களின் வாழ்வாதாரங்களை கொண்டு நடத்தவே, இந்த கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கால் சில தளர்வுகளை மேற்கொண்டு, பொருளாதார மத்திய நிலையங்கள் போன்றவற்றைதத் திறக்க நடவடிக்கை எடுத்தோம் என்றார்.

## கறையற்ற ஒருவரே...

கடனை திருப்பிச் செலுத்தும் போராட்டத்தில் நாடு சிக்கிக்கொண்டுள்ள நிலையில், பொருளாதார நெருக்கடி மற்றும் பாரிய அந்நிய செலாவணி தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, அரச நிதி தொடர்பில் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினராகவும் நிதி இராஜாங்க அமைச்சராகவும் செயற்பட்ட அஜித் நிவாட் கப்ராலை, மத்திய வங்கியின் ஆளுநராக பிரேரித்து நியமிக்கின்ற போது, சர்வதேச சமூகத்திற்கு நாடு குறித்தும், நாட்டின் பொருளாதாரம் குறித்தும் குழப்பம் ஏற்படுவதோடு, நம்பிக்கையின்மை வலுப்படும் என்றார்.

இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்துக்கு பல மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்கச் செய்த ஹெஜின் உடன்படிக்கை, அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலத்திலேயே இடம்பெற்றது.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற வேண்டுமாயின், சர்வதேசத்தின் நன்மதிப்பை பெற்று, சர்வதேசம் நம்பிக்கை கொள்கின்ற, கறையற்ற ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## 16ஆவது ஆளுநர் 15ஆம்...

மத்திய வங்கியின் ஆளுநராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், நேற்று (14) நியமிக்கப்பட்டார்.

இன்று (15) முதல் அமலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால், தனது கடமைகளை இன்று (15) பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ளார்.

பட்டயக் கணக்காளரான அஜித் நிவாட் கப்ரால், அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். அத்துடன், சுமார் 9 வருடங்களாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகவும் பதவி வகித்துள்ளார்.

## கெட்டகொடவுக்கு வெள்ளி...

"ஜயந்த கெட்டகொடவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு கூடி தீர்மானிக்கும்" என ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்தமையால் ஏற்பட்டுள்ள தேசிய பட்டியல் எம்.பி பதவிக்கே ஜயந்த கெட்டகொடவை நியமிக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஜயந்த கெட்டகொட, பெசில் ராஜபக்ஷவுக்காக ஜூலை 6ஆம் திகதியன்று தனது பதவியைத் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 5 சதவீதம் தவறானது

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கருத்தானது அமைச்சர் பந்துல குணவர்தனவின் தனிப்பட்ட கருத்தாகும் என்றார்.

## குளத்தின் பாதுகாப்பு சுவருக்கு பூசப்படும்...

1.26(0.5078) ஏக்கராக குறைவடைந்துள்ளமை தெரியவந்தது.

இவ்வாறான நிலையில், குறித்த குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் நிலையில், குளத்திலிருந்து தூர்வாரப்பட்டு மண்ணை மீண்டும் குளத்தின் சுற்றுப்புறங்களில் கொட்டியதாக குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பில் கள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்தார்.

இவ்வாறான நிலையில், அவர் பார்வையிட்டு சென்ற நிலையில், இவ்வாறு இடம்பெறுவது பலருக்கும் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

### வேலைகள் இடைநிறுத்தம்

மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் சென்றார்.

இதன்போதே, வர்ண பூச்சு பணிகளை இடைநிறுத்துமாறு, மேயர் பணித்துள்ளார்.

### ஒலிம்பிக் வர்ணம்

யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிள்ளையார் குளம் புனரமைப்பு செய்யப்படும் நிலையில், குளத்தை சுற்றி புதிதாக கட்டப்பட்டிருக்கும் பாதுகாப்பு சுவர்களில் பௌத்த கொடியை ஒத்த வர்ணம் தீட்டப்படுவதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், இது தொடர்பில் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையிலையே, இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாணம் பிள்ளையார் கோவில் குளத்தைப் புனரமைக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, வர்ணப்பூச்சுப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் இந்நிலையில், குறித்த வர்ணங்கள் பௌத்த கொடியை பிரதிபலிப்பதாக ஏற்படுத்தப்பட்ட சர்ச்சை தொடர்பில், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டதாகவும் கூறினார்.

அதற்கு, குறித்த நிறங்கள் ஒலிம்பிக் கொடியை பிரதிபலிக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதாகவும் அவை அருகில் உள்ள முன்னணி ஆரம்ப பாடசாலையின் மாணவர்களை கருத்தில் கொண்டு பயன்படுத்தப்பட்டு உள்ளதாகவும், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர் எனவும் அங்கஜன் தெரிவித்தார். எனவே, இவ்விடயத்தில் வீண் சர்ச்சைகளை தவிர்க்குமாறும், சுயலாப அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கும் போது பௌத்த கொடியில் பச்சை நிறம் உள்ளடக்கபட்டிருக்கவில்லை என்பதை கருத்தில் கொள்ளுமாறும் அவர் கூறினார்.

## யாழில் ஞானசார தேரர்...

இலங்கையில் உள்ள நான்கு கிருஷ்ணன் கோவில்களில், இவ்வாறான பூஜை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில், நேற்று (14), இந்த யாகம் நடைபெற்றது.

பொன்னாலை வரதராஜப் பெருமான் கோவில் பிரதம குருக்கள் சோமஸ்கந்த சர்மா, நயினா நாகதீபம் விகாராதிபதி மீககா வதுலே ஸ்ரீ விமல ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்த யாகத்தில், பொதுபல சேனாவின் பொதுசெயலாளர் கலகொட அத்துரலிய ஞானசார தேரர் கலந்துகொண்டார்.

யாகத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த ஞானசார தேரர், இன மத வேறுபாடு இன்றி, கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பாணத்தில் இந்தச் சிறப்பு பூசை வழிபாட்டை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

"சிங்களவராக இருக்கட்டும்; தமிழராக இருக்கட்டும், எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தை சேர்ந்தவர்களும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். சிலர் ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் உள்ளார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக, பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறையை போல, இந்து மதத்தில் உள்ள ஆகம விதிமுறையை இணைத்து, இந்தத் தொற்றில் இருந்து நாடு விடுபட வேண்டுமென, கடவுளிடம் வேண்டி, ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம்" என்றார்.

பௌத்தம், இந்து, இஸ்லாம் என்ற பேதத்தை மறந்து, அனைவரும் இணைந்து இந்தக் கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், குறித்த வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புவதாகவும் கூறினார்.



பாடசாலைகளைத் திறப்பதற்கான

## வழிகாட்டல்கள் விரைவில்

பாடசாலைகளை விரைவில் திறப்பது தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் விரைவில் சுகாதார அமைச்சு வெளியிட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைத் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை எதிர்வரும் 17ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது.

12 வயது தொடக்கம் 19 வயது வரையிலானவர்களுக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கையர்கள்

## வெளிநாட்டு உள்ளாடைகளை அணிவது வெட்கத்துக்குரியது

உலகுக்கு சிறந்த உள்ளாடைகளை வழங்கி வரும் இலங்கையர்கள், வெளிநாடுகளின் உள்ளாடைகளை அணிவது வெட்கத்துக்குரிய செயல் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் நல்லது இல்லை என்றாலும், தேசிய உற்பத்திகளை முன்னெடுப்பதற்கு அது வழி வகுத்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உள்ளாடைகளை அணியவில்லை என, நாட்டில் எவரும் உயிரிழப்பதில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

உலக நாடுகளுக்கு சிறந்த உள்ளாடைகள், இலங்கையில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறான நிலையில் நாம் இதுவரையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உள்ளாடைகளையே அணிகிறோம் என்பது வெட்கத்துக்குரியது.

பல் துலக்கும் பிரஸ் முதல் ஆடைகள் வரையில் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்;

## அரசாங்கத்துக்கு பலமுறை தெரிவித்துவிட்டோம்



காலத்துக்குத் தேவையான மாற்றங்கள் குறித்த முன்மொழிவுகளை ஏற்கெனவே அரசாங்கத்துக்கு பல தடவைகள், பல கட்டங்களில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் காணப்படும் சில விடயங்களில், காலத்துக்குத் தேவையான மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் நாம் உடன்படுகின்றோம். குறிப்பாக, பெண்களின் ஆதங்கங்கள் இம்மாற்றங்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

எனினும், இது முஸ்லிம்களது மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதாலும், ஒரு முஸ்லிமுடைய வாழ்க்கை அவனது மார்க்கத்தோடு இணைக்கப்பட்டு இருப்பதனாலும் இம்மாற்றங்கள் மார்க்க அடிப்படைகளுக்கு முரணில்லாத வகையிலும் உரிய தரப்பினரினருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளை உள்வாங்கியுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்நிலையில் இஸ்லாமிய மார்க்க, சிவில் நிறுவனங்களுடைய ஆலோசனைகளை கருத்திற் கொள்ளாமல், அமைச்சரவையில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் சம்பந்தமாக சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பது மிகக் கவலைக்குரிய விடயமாகும். இவ்விடயத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது அதிருப்தியையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றது.

எனவே, அமைச்சரவையின் இத்தீர்மானங்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யும்படியும், குறித்த விடயங்கள் தொடர்பான மார்க்க அடிப்படைகளை முறையில் கவனிக்குமாறும் நாட்டின் அனைத்து பிரஜைகளின் உரிமைகளையும் மதித்து, எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையில், இந்நாட்டின் பல்லின கலாசாரத்தைப் பேணக்கூடிய விதத்தில், அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்த ஒரு பொறிமுறை மூலம் இவ்விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் படியும் அரசாங்கத்தையும் நீதி அமைச்சரையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மிக அன்பாக வேண்டிக் கொள்கின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கால்

# எரிபொருள் பாவனை 40 சதவீதத்தால் குறைவு

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக, நாட்டில் எரிபொருள் பாவனை நூற்றுக்கு 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.



நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்கு மத்தியில் எரிபொருள்களை விநியோகிக்கும் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன. 30 நாள்களுக்கு தேவையான டீசல், பெற்றோல் தொகை கைவசம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தட்டுப்பாடுகள் இல்லாமல் நாட்டுக்கு தேவையான எரிபொருள்களை விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களை பவுசர்கள் ஊடாக விநியோகிக்கும் செயற்பாடுகள் குறைவடைந்திருந்தாலும், ரயில்களில் இப்பணிகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அநுராதபுரம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உள்ளிட்டவற்றுக்கு நாள்தோறும் எரிபொருள், ரயில்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

பொதுமுடக்கம் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீதின் நெறிப்படுத்தலில் நாட்டின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்குடா தொகுதி அமைப்பாளரும் ஐக்கிய காங்கிரஸின் பிரதி தலைவர்களில் ஒருவருமான சல்மான் வஹ்ஹாப் தலைமையில் ஓட்டமாவடியிலும், கொழும்பு பிரதான இணைப்பாளரும் கட்சியின் உப தவிசாளருமான மௌலவி இன்ஹாம் தலைமையில் கொழும்பிலும், வன்னி மாவட்ட இணைப்பாளரும்,

கட்சியின் தேசிய அமைப்பாளர் சதீக் தலைமையில் மன்னாரிலும், காத்தான்குடி இணைப்பாளர் அன்வர் தலைமையில் காத்தான்குடியிலும், கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் சப்வான் தலைமையில் புத்தளத்திலும் வறிய மக்களுக்கு உதவும் முகமாக ஐக்கிய காங்கிரசினால் ஏழைகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.



வறிய மக்களுக்கு உதவும் முகமாக ஐக்கிய காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கல்முனை அக்ரம் பாம் ஹவுஸினால் வழங்கப்பட்ட நிதி உதவி மூலம் ஏழைகளுக்கான இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களின் பக்கமே அரசாங்கம் நிற்கும்

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் 125 ரூபாய்க்கு அரிசியை பெற்றுக்கொள்ள முடியும். அரசாங்கம் பொதுமக்களின் பக்கமே நிற்குமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் பிரதான நான்கு அரிசி ஆலைகள் காணப்படுகின்றன என்பதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. இதில் சில அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் ஹெலிகொப்டர் வரையில் வைத்திருக்கிறார்கள்.

நெல்லைக் கொள்வனவு செய்து, அதனை அரிசியாக்கி விற்பனை செய்வதே இவர்களின் பிரதான வியாபாரமாக இருக்கின்றது. அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் என்ன கதை கூறினாலும், அரசாங்கம் பொதுமக்களின் பக்கமே நிற்கும்.



**“ நாட்டின் எந்தவொரு பகுதியிலும் 125 ரூபாய்க்கு சீனியைப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கும் செயற்பாடுகளைப் பயங்கரவாத செயற்பாடுகள் என கூறுவார்களாக இருந்தால் அவர்களே பயங்கரவாதிகள்**

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் 125 ரூபாய்க்கு சீனியைப் பெற்றுக்கொள்ள முடியும். நாட்டு மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பயங்கரவாத செயற்பாடுகள் என எவராவது கூறுவார்களாக இருந்தால் அவர்களே பயங்கரவாதிகள் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலவசக் கல்வியையும் இல்லாதொழித்தது அரசாங்கம்

கொரோனா வைரஸுக்கு மத்தியில் இணையவழியில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவும் உபகரணங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இறக்குமதிக்கான புதிய கட்டுப்பாடுகளால், இலவசக் கல்வியையும் அரசாங்கம் இல்லாதொழித்துள்ளது. தொடர்பாடல் உபகரணங்களை அத்தியாவசியமற்ற பொருள்களாக அறிவித்து, அவற்றுக்கான இறக்குமதியை அரசாங்கம் தடை செய்துள்ளது. இதனால் தொடர்பாடல் சாதனங்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரித்து உள்ளதாகவும் தெரிவித்தார்.



ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, மாணவர்களுக்கு இலவசமாக டெப்களை வழங்க நடவடிக்கை எடுத்தார். எனினும் தற்போது ஆட்சியில் இருப்பவர்கள், அப்போது இதனை எதிர்த்தனர். மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார். கோழியை பார்த்துக்கொள்ள வேண்டுமென நரியிடம் விட்ட கதையே இது எனவும் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு மறுத்தால்

## போராட்டம் தொடரும்

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் நிதி அமைச்சருடன் கலந்துரையாடுவதற்கு இடமளிக்கவில்லை என்றால் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர், நிதி அமைச்சருடன் ஆசிரிய தொழிற்சங்கங்கள் கோரியுள்ள கலந்துரையாடல் நடைபெறுமாக இருந்தால், அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் பெரும்பாலும் நிறைவடைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.



நிதி அமைச்சருடன் கோரப்பட்டுள்ள கலந்துரையாடல் தீர்மானம்மிக்க ஒன்றாக இருக்கும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## மேசை மீது தலையை சாய்த்த பொலிஸ் அதிகாரி மரணம்

பெந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி வந்த உப பொலிஸ் அதிகாரி ஒருவர், மேசை மீது தலையை சாய்த்து ஓய்வெடுத்த நிலையில், அவ்வாறே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 12ஆம் திகதி இரவு நேர சோதனை நடவடிக்கைகளை முடித்துவிட்டு, பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிய அவர், ஓய்வெடுப்பதற்காக பொலிஸ் நிலையத்திலிருந்த மேசை மீது தலையை சாய்த்தவாறு ஓய்வெடுத்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளார்.

பெந்தோட்டை பொலிஸ் நிலையத்தின் பல்வேறு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் பிரிவின் பொறுப்பதிகாரியாக செயற்பட்ட 58 வயதுடைய சுனில் வசந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த




குறித்த பொலிஸ் அதிகாரி, குணமடைந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதோடு, உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உடல் மேலதிக பரிசோதனைகளுக்காக பலப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாட்டு மக்களின்

## உள்ளாடைகளையும் உருவியது அரசாங்கம்

அரசாங்கத்தின் மோசமான பொருளாதாரக் கொள்கையால், நாட்டு மக்களுக்கு உள்ளாடைகள் மாத்திரமே எஞ்சியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். இறக்குமதிகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் புதிய கட்டுப்பாடுகளால், உள்ளாடைகளும் பறிப்போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இணைய வழியில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அலைபேசி அவசியமானது. எனினும் அலைபேசிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள



கட்டுப்பாடுகள் காரணமாக சாதாரண மக்கள் அதனைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான கொள்கைகளுக்கு மத்தியில் இணைய வழியிலான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது எவ்வாறு எனவும் அவர் வினவினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், கொரோனா வைரஸ் பரவல் நாட்டில் பரவ ஆரம்பிப்பதற்கு முன்னரே, அரசாங்கம் தவறான பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருந்தது. இதனாலேயே நாட்டின் பொருளாதாரம், சரிந்து வீழ்ந்ததாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியானதன் பின்னர், வரி குறைப்புகளை செய்து அரசாங்கத்துக்கு கிடைத்து வந்த வருமானங்களை இல்லாதொழித்தார். அதேபோல அரசாங்கம் 1,250 பில்லியன் ரூபாய்களை அச்சிட்டுள்ளது. இதனால் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு சென்றுள்ளன என்றார்.

விலங்குகள், பறவைகளுடனான

# தொடர்புகளை குறைக்கவும்

பாறுக் ஷிஹான்

கொரோனாவில் இருந்து பாதுகாப்புப் பெற விலங்குகள், பறவைகளுடனான தொடர்புகளை பொதுமக்கள் குறைத்துக்கொள்ள வேண்டுமென நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் கே.எல்.எம். நக்பர் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய காலகட்டத்தில் எந்தத் துறையினராக இருப்பினும் சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு,



நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையில் நேற்று (14) நடைபெற்ற போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தடுப்பூசிகளை வயது வித்தியாசமின்றி நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் அநாவசியமான வீட்டில் இருந்து வெளியேற வேண்டாம்.

"ஆயுர்வேத சுகாதாரத் துறையானது விலங்குகள், பறவைகளின் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ளுங்கள் என ஆலோசனை வழங்குகின்றது.

"தோடம்பழம், தேசிக்காய் போன்ற பானங்கள், அரிசிக்கஞ்சிகளை அடிக்கடி நாம் அருந்த வேண்டும். அதிகமான இயற்கை உணவுகளை உண்ண வேண்டும். 8 தொடக்கம் 10 மணிவரை ஓய்வெடுக்கவும்.

"மாமிச உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சுமார் 1 மணித்தியாலம் சூரிய ஒளி கிடைக்க கூடிய வகையில் இருத்தல் வேண்டும். வீடுகள், அலுவலகங்கள் என நாம் வசிக்கின்ற இடங்களை நன்கு காற்றோட்டம் உள்ள இடமாக மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

"இவற்றைச் செய்வதன் ஊடாக டெல்டா மாத்திரமல்ல, எந்த வைரஸ் திரிபுகள் எதிர்காலத்தில் உருவாகினாலும் அதிலிருந்து நாம் எம்மை முழுமையாக பாதுகாத்துக் கொள்ள முடியும்" என்றார்.

விசேட அதிரடி

## படையினருக்கு 'சுவ தாரணி'




ஏ.எல்.எம்.ஷினாஸ்

கொரோனா தொற்றை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலை திட்டத்தின் ஒரு கட்டமாக, நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையினால் பாரம்பரிய ஆயுர்வேத முறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் 'சுவ தாரணி' ஆயுர்வேத பானம், விசேட அதிரடிப் படையினருக்கு நேற்று முன்தினம் (13) இலவசமாக வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இணைப்பாளரும், சிறுவர் மற்றும் இளைஞர்களை பாதுகாக்கும் சமூக ஸ்தாபனத்தின் தலைவருமான பி. சர்மில் ஜஹான் தலைமையில், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாமில் இந்தப் பானம் வழங்கப்பட்டது.

நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.ஏ.நபீல் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, ஒரு தொகுதி மருந்துகளை விசேட அதிரடிப்படை பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம். பி.பி.எம்.டயஸிடம் வழங்கி வைத்தார்.

மேம்பாட்டு

## உதவியாளர் நியமனம்

நூருல் ஹுதா உமர்

காரைதீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்பாளருக்கான அத்தியாவசிய சேவை திட்டத்தின் கீழ், மேம்பாட்டு உதவியாளர்களாக பட்டதாரி பயிலுனர்கள் 6 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நியமனம், காரைதீவு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளார் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் நேற்று (14) நடைபெற்றது.

இதில் உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், அம்பாறை மாவட்டச் செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி ஹாஜா முஹம்மத் நபார் உள்ளிட்டோர் கலந்துகொண்டார்கள்.



எம்.எச்.எம். அஷ்ரபின்

## 21ஆவது வருட நினைவு தினம்

எம்.எஸ்.எம். ஹனீபா



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் 21ஆவது வருட நினைவு தினம், எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளதாக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதிர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில், காணொளி ஊடாக இந்நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றவுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம், சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பர், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல். தவம், சட்டத்தரணி பரோஸா ஹுஸைன், சென்னையை சேர்ந்த திரைப்பட நடிகர் வீ.ஐ.எஸ். ஜெயபாலன், சமூக செயற்பாட்டாளர் எம்.பௌசர், கவிஞர் நபீல், வைத்திய கலாநிதி தாஸிம் அஹமட் ஆகியோர் எம்.எச்.எம். அஷ்ரப் தொடர்பான கருத்துரைகளை இதில் முன்வைக்கவுள்ளனர்.



## வைத்தியசாலைக்கு உதவி

சுகாதார அமைச்சின் ஊடாகப் பெறப்பட்ட மருத்துவ உபகரணங்கள், கிண்ணியா தளவைத்தியசாலைக்கு, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக்கினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு, கிண்ணியா தள வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம். ஜவாஹீர் தலைமையில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றன.

இதன்போது வழங்கப்பட்ட 4.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் திரையில் இரத்த அழுத்தம் மற்றும் சுவாச விகிதம், ஈசிஜி போன்ற பல்வேறு விடயங்களை ஒரே தடவையில் பார்க்கக்கூடிய வசதி உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(படம் - ஏ.எம்.ஏ.பரீட்)

காணிப் பதிவுகளை

# உடன் நிறுத்துக

என்.ராஜ்



வலிகாமம் வடக்கில், காணி பதிவுகள் மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறு, வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

தற்பொழுது இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கடந்த 31 வருடங்களாக வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் வசம் உள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை என்றார்.

அரசாங்கத்தால் இராணுவம் வசமுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்காக, அக்காணிகளின் காணிகளின் உரிமையாளர்கள், தம்மைப் பதிவு செய்யுமாறு பல தடவைகள் கோரப்பட்டு, பொதுமக்களும் அவ்வாறு பதிவுகளை மேற்கொண்டிருந்ததாகவும் ஆனால் இன்றுவரை தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை எனவும், குணபாலசிங்கம் தெரிவித்தார்.

ஏற்கெனவே இராணுவத்திடமிருந்து தமது காணியை மீட்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவித்த அவர், ஆனால் தற்போது வரை அந்த முயற்சி பயனளிக்கவில்லை எனவும் கூறினார்.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கத்தாலும், இராணுவத்திடம் காணிகள் உள்ளோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு இனியும் விவரங்களை சேகரித்து கொண்டிருக்காது. அந்த விவரம் சேகரிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்தி, இந்தப் பதிவு நடைமுறையை சற்று பிற்போடுமாறும், அரசாங்கத்தை கோரினார்.

ஏற்கெனவே சேகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணி விவரங்கள் இராணுவ தளபதி மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீண்டும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கூறுவதன் காரணமாக, பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள் எனவும், அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் மக்களுக்குரிய காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், பொதுமக்கள் கடந்த 30 வருடங்களாக பெரும் சிரமத்தை எதிர்நோக்கி உள்ளார்கள் எனவும் எனவே, பொதுமக்களின் நலன் சார்ந்து பொதுமக்களின் காணிகளை கையளிக்க வேண்டும் எனவும் கோரினார்.

அத்துடன், ஒவ்வொரு வருடமும் ஐ.நா சபையில் அமர்வு ஆரம்பமாகும் போது, ஆட்சியில் உள்ள அரசாங்கமானது, காணி விடுவிப்பு தொடர்பில் சில முன்னெடுப்புகளை முன்னெடுக்கும். ஆனால், ஐக்கிய நாட்டு சபையின் கூட்டத்தொடர் முடிந்த பின்னர், அது புஷ்வானமாக போய்விடும். எனவே இம்முறை இந்த அரசாங்கமானது வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் விடுவிக்கப்படாதுள்ள காணிகளை பொதுமக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும், குணபாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்

## வாகன பிரசார பேரணி

செந்தூரன் பிரதீபன்

விவசாய அமைச்சின் ஏற்பாட்டில், முதன் முறையாக, யாழ்ப்பாணத்தில், நேற்று (14), சேதனமுறையில் நெற்செய்கையில் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான வாகனப் பிரசார பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடமாண விவசாய திணைக்களம் இந்தப் பிரசார பேரணியை ஏற்பாட்டு செய்திருந்தது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில், நெல் உற்பத்தி அதிகளவு செய்கை பண்ணப்படும் பிரதேசங்களான தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இந்தப் பிரசாரப் பேரணி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அரசாங்கத்தின் திட்டத்துக்கு அமைய, சேதன பசளையை தாங்களாகவே தயாரித்து பயிர்ச்செய்கையை மேற்காள்ள வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், நெற்செய்கை காலத்தில் ஏற்படும் கபிலநிறத்தத்தி, வென்முதுகு தத்திப் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும், விரைவு முறையில் உயிர் போசனை மிகு கூட்டெரு தயாரித்தல் எப்படி என்பது தொடர்பிலும் செயன்முறை மூலம் விளக்கப்படுத்தினர்.

இந்த ஆரம்ப நிகழ்வில், வடமாகாண விவசாய மாகாணப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ். மாவட்ட உதவி பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி, நெற்செய்கை தொடர்பிலான போதனா ஆசிரியர் எஸ். நிரஞ்சன், மட்டுவில் பகுதிக்கான விவசாய போதனா ஆசிரியர் ஜனுஜா சேதுலிங்கம் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்துகொண்டனர். அத்துடன், சௌபாக்கிய திட்டத்தின் கீழ் நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு வரிசையில் நெல்லை விதையிடுவதற்கு நெல்மூடைகள் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## வீடு கையளிப்பு...

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் கிராமத்தில், மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடொன்றை, நேற்று (14) காலை, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மேல் திறந்து வைத்தார். (படப்பிடிப்பு: எஸ். றொசேரியன் லெம்பேட்)

## அரங்க கதையாடல்

எஸ்.குகன்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (19) இரவு 7 மணிக்கு, நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை ஆசிரியர் ந.குகபரன், 'ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் தமிழ் நாடக முயற்சிகள்' எனும் தலைப்பில் கதையாடவுள்ளார்.

ஆர்வமுடையவர்களை, சூம் செயலி இலக்கம்: 6473348261, கடவுச்சொல்: ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு, புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## புதிய பீடாதிபதி தெரிவு

எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் புதிய பீடாதிபதியாக, வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ பீடத்தின் தற்போதைய பீடாதிபதியும் சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் எஸ். ரவிராஜின் பதவிக் காலம் நிறைவு பெற்றதையடுத்து, புதிய பீடாதிபதிக்கான தேர்தல், நேற்று முன்தினம் (13) காலை நடைபெற்றது.

இதன்போது, மருத்துபீட, பீட சபை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்கெடுப்பில், வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் 22 வாக்குகளைப் பெற்று 4 மேலதிக வாக்குகளால், பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கொவிட் - 19 தடுப்புச் செயலணியின் இணைப்பாளராக பதவி வகிக்கும் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

இவர், சமுதாய மருத்துவத்துறையின் தலைவராக 2012ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதுளை மாவட்டத்தில்

# தடுப்பூசி அட்டை கட்டாயம்

## அடுத்த வாரம் முதல் அமல்



■ பாலித ஆரியவன்ஸ

பதுளை மாவட்டத்தில் அரச அலுவலகங்களில் பணியாற்றும் 30 வயதுக்கு மேற்பட்ட சகல அதிகாரிகளும் பணியாளர்களும், இந்த மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், அரச அலுவலகங்களுக்கு வரும் பணியாளர்கள், தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அட்டையை, சோதனை நடவடிக்கைகளுக்காக காண்பிக்க வேண்டும் என, நேற்று (14) நடைபெற்ற பதுளை மாவட்ட கொரோனா ஒழிப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், குறித்த அரச அலுவலகங்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகைத் தரும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும், தம்வசம் கொரோனா தடுப்பூசி அட்டையை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், பதுளை மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களுக்கு சுற்றுநிரூபம் ஒன்றை அனுப்புமாறு, ஊவா மாகாண ஆளுநரால், மாவட்ட செயலாளரகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பதுளை மாவட்டத்திலுள்ள நகரங்களுக்கு வருகை தரும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், தடுப்பூசி அட்டையை வைத்திருப்பது அவசியம் என்பதுடன், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இது தொடர்பான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்துக்குரிய நகரங்களில் ஆங்காங்கே எழுமாறான அன்டிஜன் பரிசோதனையும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில், எதிர்வரும் 21ஆம் திகதி, நாட்டைத் திறப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதுடன், சுற்றுலாத்துறை போன்ற துறைகள் தொடர்பில் அதிகம் அவதானம் செலுத்தப்பட்டள்ளது.

விசேடமாக சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்த எல்ல பிரதேசத்தின் சுகாதார நிலை குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மழையில் அடித்து வரும் கழிவுகள்

# மவுசாக்கலையில் தேங்குகின்றன

■ செ.தி பெருமாள்



கடந்த சில வாரங்களாக மலையகத்தில் பெய்துவரும் கனமழையின் காரணமாக, மத்திய மலைநாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் ஆறுகள், ஓடைகளில் ஊடாக அடித்துச் செல்லப்படும் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகள் பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் அதன் கரையோரப் பகுதிகளில் தேக்கமடைந்துள்ளன.

குறிப்பாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்துக்கான நீரைக் கொண்டு செல்லும் மறே ஓயா,காட்மோர் ஓயா, நல்ல தண்ணீர் ஓயா, சாமிமலை ஓயா உள்ளிட்ட பல ஆறுகளும் சிற்றாறுகளும் இணையும் மவுசாக்கலை நீர்த்தேக்க பகுதியிலேயே, இவ்வாறான கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இதுகுறித்து நீர்மின் நிலைய உயர் அதிகாரி கருத்து தெரிவிக்கையில், நீர் ஓடைகளிலும், நீர்தேக்கத்துக்கு நீர் வழங்கும் ஆறுகளிலும், கழிவுகளை போட வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இதனால் நீர்த்தேக்கத்தில் வாழும் மீன்கள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.

இவ்வாறு தேக்கமடைந்துள்ள கழிவுகளை அகற்றும் பணிகளில் கடற்படையினர், இலங்கை மின்சார சபையின் பாதுகாப்பு பிரிவினர்,மவுசாக்கலை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினர் மற்றும் அதிரடிப்படையினர், மஸ்கெலியா பொலிஸார்,மீன்பிடி துறையினர் ஈடுபட்ட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பனில்கந்த தோட்ட மக்களின்

# காணி கோரிக்கை நிறைவேற்றப்படும்

■ ரா.கமல்

இரத்தினபுரி, பனில்கந்த தோட்ட மக்கள், தோட்ட நிர்வாகத்தால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் காணிகளை, விவசாய நடவடிக்கைகளுக்காக தமக்குப் பெற்றுத் தரும்படி தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

எனவே, குறித்த காணிகளை தோட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தான் எம்பிலிப்பிட்டிய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ரஞ்சன் வீரசிங்கவுடன், பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்வி நடவழக்கைகளை ஆரம்பிக்க

# அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

■ எம். கிருஸ்ணா



கல்வியைத் தொடர முடியாதுள்ள மாணவர்களின் எதிர்காலம், எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது, கவலையளிப்பதாக உள்ளதென தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி பொது செயலாளரும் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினருமான பி.கல்யாணகுமார் தெரிவித்துள்ளார்.

> **கல்வியைத் தொடர முடியாதுள்ள மாணவர்களின் எதிர்காலம், எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது, கவலையளிப்பதாக உள்ளது. கொரோனா தொற்று இரண்டு வருடம் பூர்த்தி ஆகின்ற நிலையில், பாடசாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை**

மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா தொற்று இரண்டு வருடம் பூர்த்தி ஆகின்ற நிலையில், பாடசாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. கொரோனா முடக்கம் முடிந்து, பாடசாலைக்கு வரும் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு தாமதம் ஏற்படுகின்றது.

இவ்வாறான நிலையில், இரண்டு வருடம் என்பது ஒரு பாரிய இடைவெளியாகும். இணையதளம் ஊடான கற்பித்தல் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில், அவர்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, கல்வி தொடர்பில் அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளர்.



# அரிசிக்காக...

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டாலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்வதற்காக, ஹட்டனில் உள்ள சதொச விற்பனை நிலையத்தில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். இவ்வாறு வரிசையில் காத்திருந்தவர்களுக்கு ஒருவருக்கு 5 கிலோகிராம் அரிசியை மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ( சுதத்.எச். எம்.ஹேவா)



வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு

# அங்கும் தடுப்பூசி

## சப்ரகமுவ ஆளுநர் தெரிவிப்பு

■ சிவாணிஸ்ரீ

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் தேவையான தடுப்பூசிகளை இராணுவ வைத்தியசாலையில் பெற்று கொள்ள முடியும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட கொரோனா தடுப்பு குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (13) நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தொழில் மற்றும் வேறு நடவடிக்கைகளுக்கு பிற நாடுகளுக்கு செல்வதற்காக பல்வேறு தடுப்பூசிகள் பரிந்துரைக்கப்பட்டு உள்ளதுடன், இவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, இலங்கை இராணுவ வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் மற்றும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவடைந்து வருவதாக கேகாலை மாவட்ட பிரதேச சுகாதார பணிப்பாளர் சமில விஜேகோன் குறித்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரண்டாயிரம் ரூபாய்க்கு நேர்முகப் பரீட்சை

## பயனாளிகள் குற்றச்சாட்டு

■ எஸ்.சதீஸ்

அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொகவந்தலாவை கெர்கஸ்வோல்ட் 319 G கிராம சேவகர் பிரிவில், அரசாங்கத்தின் நிவாரணத் தொகையான 2,000 ரூபாயைப் பெறச் செல்லும் பயனாளிகளிடம், கிராம உத்தியோகத்தர்கள் நேர்முகப் பரீட்சைகள் நடத்துவதாக பயனாளிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த நேர்முகப்பரீட்சை நேற்று முன்தினம் (13) முன்னெடுக்கப்பட்டதோடு, எவ்வித வருமானங்களையும் பெறாத குடும்பங்களை சார்ந்த பயனாளிகளிடம் குடும்ப விவரங்களை, கையெழுத்துடன் கடிதம் ஒன்றையும் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு தோட்டப் பிரிவுக்கு 20 பேர் வரை தெரிவு செய்யப்படும் நிலையில், இவர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பது தெரியாது உள்ளதுடன், இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இரகசியமான முறையில் குறித்த நிவாரணத் தொகை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில்

# கொரோனா தகவல்கள் முடங்கின

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா பாதிப்புகள், உயிரிழப்புகள் குறித்து மாவட்ட செயலகத்தில் இயங்கும் கண்காணிப்புப் பிரிவு, கடந்த காலங்களில் மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ முகநூல் வழியாக அறிக்கைகளை வெளியிட்டு வந்த நிலையில், ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து எவ்விதமான தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட பிரதான சுகாதார காரியாலயத்தின் மாவட்ட தொற்றியல் பொறுப்பு வைத்தியர்களிடம் தொலைபேசி ஊடாக தொடர்புகளை ஏற்படுத்திய போதிலும், எந்தவோர் பயனும் கிடைக்கவில்லை.

ஆகையால், இவ்விடயம் குறித்து நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவின் கவனத்துக்கு ஊடகவியலாளர்கள் கொண்டு வந்துள்ளதுடன், இது தொடர்பாக அவதானம் செலுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் நண்பர்களுக்கு

# அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டாம்

■ மொஹமட் ஆஸிக்

கண்டி மாவட்டத்தில் மரக்கறிகள் விற்பனை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது, அன்றாட வியாபாரிகளுக்கு அந்த அனுமதிபத்திரங்களை வழங்காமல், அரசியல்வாதிகளின் நண்பர்களுக்கு வழங்கியுள்ளதால் நுகர்வோர், விவசாயிகள் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை வர்த்தக நிலையத்தின் மொத்த வர்த்தக சங்கம் தெரிவிக்கின்றது.

கட்டுகஸ்தோட்டை வர்த்தக நிலையத்தின் வர்த்தக சங்கத்துக்கும் பிரதேச செயலாளருக்குமிடையில் நேற்று (14) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே, வர்த்தக சங்கத்தின் தலைவர் டி.என்.சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகளின் நண்பர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதால், அவர்கள் மிகக் கூடிய விலையில் மரக்கறிகளை விற்பனை செய்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வீணான கவலை

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நாளன்று உரையாற்றியிருக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் (கள்), இலங்கையின் விவகாரம் தொடர்பில் 'கரிசனை', 'கவலை', 'உன்னிப்பாக அவதானிக்கிறது', 'அறிவுறுத்துவோம்' போன்ற சொற்களையே கையாண்டு வந்திருக்கின்றார்கள்.

அதேபோலதான், நேற்றுமுன்தினம் (13) ஆரம்பமான 48 ஆவது கூட்டத்தொடரில், உலக மனித உரிமைகளின் நிலைமை தொடர்பில் உரையாற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட், இலங்கை குறித்து கவலையை வெளிப்படுத்தி இருந்தார். அக்கவலைக் கண்ணீரை துடைக்கும் வகையில், இத்தாலியிலிருந்து கருத்துரைத்திருந்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், "ஐ.நாவின் செயற்பாடுகள் நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருக்கும் காலப்பகுதியில் அத்தியாவசிய பொருள்களைப் பதுக்குதல் கைமீறிச் சென்றிருக்கின்றன. ஆங்காங்கே ஒருசில சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு பதுக்கல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால், பொருள்களின் விலைகளோ ஏறுமுகத்திலேயே நிற்கின்றன.

அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை முறைப்படுத்துவதற்கே, அவசரகாலச்சட்டம் அமல்படுத்தப்பட்டதாக அரசாங்கத்தால் வியாகியானம் செய்யப்பட்டது. எதிரணியினர் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்களில் பலர், 'ஜனநாயகத்தை நசுக்கும்' செயலென விமர்சித்திருந்தனர். "அன்று தமிழர்களுக்கு எதிராக நின்றது, இன்று சிங்களவர்களை நோக்கிப் பாய்கிறது" எனத் தமிழ்த்தரப்பில் சிலர் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்நிலையிலேயே, அவசரகாலச்சட்டம் இராணுவத்தின் வகிபாகத்தை அதிகரிக்குமென ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு செயற்பாடுகளின் போதும் இராணுவத்தினர் உள்ளீர்க்கப்படுகின்றனர். சிவில் நிர்வாகத்துக்குள் இராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரிகள் திணிக்கப்பட்டுள்ளனர். நாடு, இராணுவமயமாக்கலை நோக்கி இழுத்துச் செல்லப்படுவதாக விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையிலும் அங்கிருக்கும் சனத்தொகையில், ஒரு குடிமகனுக்கு நான்கு இராணுவத்தினர் வீதம் உள்ளனர் என்ற குற்றச்சாட்டுகளை மறுக்கவே முடியாது. தற்போது மிச்செல் பட்லெட்டும் விசனம் தெரிவித்துள்ளார். ஆனால், இவற்றையெல்லாம் இவ்வரசாங்கம் கணக்கிலெடுக்காது என்பது, கடந்தகால கசப்பான அனுபவங்களாகும்.

இலங்கை தொடர்பில் கவலை கொண்டிருந்த மிச்செல், அடுத்த அமர்வின் போது, கவலை கொள்ளமாட்டார். இல்லையேல், புதிய மனித உரிமைகள் ஆணையாளர் கவலை கொள்ளமாட்டார் எனக் கூறமுடியாது. ஏனெனில், ஒவ்வொரு அமர்வுகளின் போதும் இவ்வாறான பசப்பு வார்த்தைகளை மட்டுமே, காதுகள் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

யுத்தம் நிறைவடைந்து பன்னிரண்டாண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில், காணாமற்போன தமது உறவினர்களைத் தேடிக்கொண்டிருக்கும் உறவுகளின் கண்ணீருக்கு விடைகாணவேண்டும்; அவர்களின் கவலைகள் களையப்படவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்களுக்கும் அரசியல் கைதிகளுக்கும் விமோசனம் கிடைத்தாகவேண்டும். இல்லையேல், பச்செல்ட்டின் கவலை வீணான கவலையாகிவிடும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

இன்பத்திலும் துன்பத்திலும் தன்னிலை மறப்பவர்கள், அந்த நேரத்தில் தங்களை சுதாகரித்துக் கொள்வதில்லை.

சந்தோசப்படுவதிலும் துன்பப்படுவதிலும் என்ன தவறு எனக் கேட்பதில் நியாயமுண்டு. நாங்கள் முற்றும் துறந்தவர்கள் இல்லை. ஆனால், அதீதமாக உணர்ச்சி வசப்பட்டால், நெஞ்சத்தில் உறுதி தானாகவே இழக்கப்படுகின்றது.

களிப்பு நிலை எல்லோருக்கும் தேவையான உணர்வுதான். மனம் உருகும் பக்திநிலையும் அதுதான்.

எதிலும் வெறுப்பு இல்லாத நிலை; எவரையும் ஏற்றுக்கொள்ளும் பண்பு; உதவும் மனப்பாண்மை ஆகியவை மாந்தர்களுக்கு அவசியமான குணாம்சங்களாகும்.

ஆயினும், சமநிலையில் வாழும்போது, துன்பங்களை வெல்லும் தைரியம் வந்துவிடுகின்றது. இன்பங்கள் நிரந்தரமானவை என எண்ணும் இயல்பால், ஒருவருக்குச் சின்னக் கஷ்டங்கள் வந்தாலும் தளர்வு அடைந்துபோகின்றார்கள். மனிதனுக்கு அவதாரங்கள் தேவைப்படுகின்றன. நேரத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் வைராக்கியமே அது!

–பருத்தியூர் பாலு. வயிரவநாதன்

# நிபுணர்களை வெறுக்கும் அரசியல்



எம்.எஸ்.எம். ஐயூப்

கொவிட்-19 நோயால் சகல நாடுகளிலும் சுகாதாரப் பாதிப்புகளுக்குப் புறம்பாக, பொருளாதார தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன. சகல நாடுகளிலும், நாட்டை முடக்கும் நடவடிக்கைகளால் கைத்தொழில்கள், விவசாயம், சுற்றுலாத்துறை போன்ற சகல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும், பல நாடுகள் அப்பிரச்சினைகளை சாதுரியமாக எதிர்கொண்டு, அவற்றின் தாக்கத்தைக் குறைத்துக் கொண்டுள்ளன. நிபுணர்களின் ஆலோசனைப் படி செயற்படுவதன் மூலமே, அந்நாடுகள் சவால்களை எதிர்கொண்டன.

இலங்கையின் நிலைமை, வேறுபட்டதாகவே இருக்கிறது. இங்கு அரசியல்வாதிகள், பிரச்சினைகளை மென்மேலும் சிக்கலாக்குவதிலேயே அக்கறை செலுத்துகிறார்கள். இதன் காரணமாக, இதற்கு முன்னர் பதவியில் இருந்த அரசாங்கங்களைப் பார்க்கிலும், இந்த அரசாங்கம் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டுள்ளது.

வழமையாக இலங்கையில் நிபுணர்கள், அரசியல்வாதிகளுக்குப் பயந்து, பெரும் அழுத்தங்களைப் பொறுத்துக் கொள்வதையே கண்டுள்ளோம். ஆனால், அண்மைக்காலமாக நிலைமை மாறியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. பல நிபுணர்கள் தமது பதவிகளைத் துறந்துள்ளனர்.

குறிப்பாக இந்த நிலைமை, சுகாதார துறையிலேயே காணக்கூடியதாக இருக்கிறது. கொரோனா வைரஸ், இலங்கையை தாக்க முற்பட்ட 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்தே, நிபுணர்கள் தமது பதவிகளைத் துறக்கும் சம்பவங்களைப் பற்றிய செய்திகள், வந்த வண்ணமாக இருக்கின்றன.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி, சுகாதார அமைச்சின் செயலாளராக இருந்த பத்திரானி ஜயவர்தனவுக்குப் பதிலாக, இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் மருத்துவர் சஞ்ஜீவ முனசிங்க நியமிக்கப்பட்டார். பத்திரானி, அனுபவம் வாய்ந்த மூத்த நிர்வாக சேவை அதிகாரியாவார். பயங்கர தொற்று நோயை, நாடு எதிர்கொள்ள ஆரம்பித்த நிலையில், அவர் நீக்கப்பட்டார்.

கொவிட்- 19 போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதில், மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அதற்காக, மக்களை அறிவூட்டுதல் இன்றியமையாதது. முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க, இந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்து வந்தார்.

அவர், தொடர்பாடல் விடயத்தில் சிறந்தவர்; சுனாமி, போர் கால குண்டு வெடிப்புகள் போன்ற அவசர நிலைமைகளில், சுகாதார துறையை வழிநடத்திய அனுபவம் பெற்றவர். ஆனால், எந்தவொரு காரணமுமின்றி 2020 ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி, அவர் சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஆளும் கட்சிக்குள் பல மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதிலும் சமூக சுகாதாரத்துறையில் பட்டம் பெற்ற சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயும் வைரஸ்இயல் துறை பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவும் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

திஸ்ஸ வித்தாரண, 22 வருடங்களாக மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் வைரஸ்துறைப் பிரிவின் அதிபராகக் கடமையாற்றிய அனுபவம் பெற்றவர். அதேபோல், உலக சுகாதார நிறுவனத்தின் வைரஸ்துறை ஆலோசகராக, அவர் பல ஆண்டுகளாகக் கடமையாற்றியவர்.

கொவிட்-19 பெருந்தொற்று போன்ற வைரஸ்களால் பரவும் நோய்களைத் தடுப்பதில், சமூக சுகாதாரத்துறையும் வைரஸ் துறையும்தான் முக்கியத்துவம் பெறுகின்றன.

அவ்வாறிருக்க, இவ்விருவருக்கும் சுகாதார துறையில் முக்கிய இடங்கள் வழங்கப்படவில்லை. சாதாரண சட்டத்தரணியான பவித்திரா வன்னிஆரச்சியே சுகாதார அமைச்சராக இருந்தார். இப்போது கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராக இருக்கிறார்.

அவ்வாறான நிலையிலும், கொவிட்-19 நோயின் முதலாவது அலை திறமையாக கட்டுப்படுத்தப்பட்டது எனலாம். அதனை அடுத்து, சுகாதாரதுறையின் நிபுணர்கள், ஆங்காங்கே மக்கள் கூடும் இடங்கள், பாரிய வேலைத்தளங்கள் ஆகியவற்றில் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய போதிலும், சுகாதார அமைச்சை அந்தத் திசையில் நகர்த்த, அரசியல் தலைமை முன்வரவில்லை.

நிலைமை மோசமாகுவதற்கு முன்னர், தடுப்பூசிக்கு கோரிக்கைகளை விடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை; அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, "இலங்கைக்கு தடுப்புசி அவசியமில்லை" என்றும் நாடாளுமன்றத்தில் வாதிட்டார்.

இந்த நிலையில் தான், 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், கொவிட்-19 நோயின் இரண்டாவது அலை ஆரம்பித்தது. ஐந்து மாதங்களுக்குப் பின்னர் தான், அந்த அலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அது மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் ஆரம்பித்து, பேலியகொடை மீன் சந்தையூடாக நாடு முழுவதும் ஆயிரக் கணக்கான நோயாளர்களுக்குத் தொற்றியது.

துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கக் கூடாது என்ற அறிவை, அரசியல்வாதிகள் அப்போதாவது பெற்றுக்கொள்ளவில்லை. 2021 ஏப்ரல் மாத ஆரம்பத்தில், நாளொன்றுக்கு 200 கொவிட்-19 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், சித்திரை புதுவருட பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என, சுகாதாரதுறை நிபுணர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அது புறக்கணிக்கப்பட்டது. ஏப்ரல் இறுதியில், நாளொன்றுக்கு கண்டெடுக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 1,000க்கும் அதிகமாகியது.

இதேபோல், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களின் ஆரம்பத்திலும், சுகாதார துறையினரின் ஆலோசனைகளைப் புறக்கணித்து, அரசாங்கம் கட்டுப்பாடுகளைதத் தளர்த்தியது. அதன் விளைவை, கடந்த மாதம் கண்டோம்.

அரசாங்கம் போதியளவில் பி.சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளாத நிலையிலும், நாளொன்றுக்கு அடையாளம் காணப்படும் கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை 6,000 எட்டியது. அந்நோயால் ஏற்படும் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கை 216 வரை அதிகரித்தது.

தடுப்பூசி விடயத்திலும், ஆரம்பம் முதலே அரசாங்கம் நிபுணர்களின் கருத்துகளைப் புறக்கணித்தே நடந்து கொண்டது. சுகாதார துறையினரை அடுத்து, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என்பதே உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனையாகும். இலங்கை சுகாதார அமைச்சு, ஆரம்பத்தில் வெளியிட்ட தடுப்பூசி தொடர்பான வழிகாட்டிகளிலும் அவ்வாறே கூறப்பட்டது.

ஆனால், இவ்வருடம் இலங்கையில் தடுப்பூசி செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்ட போது, சுகாதார துறையினரை அடுத்து அரசியல்வாதிகளுக்கும் அவர்களால் பரிந்துரை செய்யப்படும் பிரதேசங்களுக்குமே தடுப்பூசி வழங்கப்பட்டது.

ஒகஸ்ட் மாத இறுதியில், இலங்கையில் நாளாந்தம் 200 பேர் கொவிட்-19 நோயால் உயிரிழந்தனர். அவர்களில் 75 சதவீதமானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். அதாவது 150 பேர் முதியோர்கள்; உயிரிழந்தோரில் 91 சதவீதமானோரில் தடுப்பூசி ஒன்றையேனும் பெறாதவர்கள்.

அதாவது, உயிரிழந்தோரில் சுமார் 135 பேர் தடுப்பூசி செலுத்தப்படாத முதியோர் ஆவர். உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைப் படி செயற்பட்டு இருந்தால், ஒகஸ்ட் மாத இறுதியில், குறைந்தபட்சம் நாளாந்தம் 125 அல்லது 100 மரணங்களையாவது தடுத்திருக்கலாம். கொவிட்-19 நோயால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதில்லை என்ற அரசாங்கத்தின் முடிவும், நிபுணர்களின் ஆலோசனையைப் புறக்கணித்து, அரசியல் நோக்கத்தில் மேற்கொண்ட முடிவாகும்.

2021 மார்ச் மாதத்திலிருந்து, சுகாதார துறையில் பல நிபுணர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தவிசாளராக இருந்த மருத்துவர் ஆர். விஜேவர்தனவும் கொவிட்-19 அவசர பதிலுறுத்தல் மற்றும் சுகாதார முறைமைகள் தயார்படுத்தல் திட்டப் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டாரவும் தத்தமது பதவியிலிருந்து விலகினர்.

இதுவரை, பேராசிரியர் ஏ. பத்மேஸ்வரன், பேராசிரியர் நீலிகா மலவிகே, மருத்துவர் ரஜீவ டி சில்வா, மருத்துவர் காந்தி நாணயக்கார, மருத்துவர் சன்ன ரணசிங்க ஆகியோர், தடுப்பூசி ஆலோசனை நிபுணர்கள் குழுவிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர். முதலிரண்டு பேரும், போதிய தரவுகளின்றி சீன சைனோஃபாம் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியதை ஆட்சேபித்தும் மற்றவர்கள், சீன சினொவாக் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியதை ஆட்சேபித்தும் இராஜினாமாச் செய்ததாகவே செய்திகள் கூறுகின்றன.

இதையடுத்து, மருத்துவர் ஆனந்த விஜேவிக்கிரமவும் மருத்துவர் அசோக குணரத்னவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பல்துறை தொழில்நுட்பக் குழுவிலிருந்து கடந்த வாரம் விலகியுள்ளனர். கண்டி மாவட்டத்தில் ஸ்புட்னிக் தடுப்பூசி வழங்கும் போது, ஏற்பட்ட சில முறைகேடுகள் மற்றும் எந்தவித விஞ்ஞானபூர்வ அடிப்படையுமின்றி ஹம்பாந்தோட்டையில் 20 - 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்க முடிவு எடுத்தமை ஆகியவையே, இதற்குக் காரணம் எனத் தெரிய வருகிறது.

நிபுணர்களைப் புறக்கணித்தல், சுகாதார துறையில் மட்டும் இடம்பெறும் நிகழ்வல்ல. அண்மையில், மிருகக் காட்சிசாலையின் பணிப்பாளர் இஷினி விக்கிரமசிங்க, சட்ட விரோதமாக வைத்திருந்த யானைக் குட்டிகளை, மீண்டும் அவர்களிடமே கையளிப்பதென எடுத்த முடிவை எதிர்த்து தமது பதவியை துறந்தார்.

அதேவேளை, மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மனும், தாம் பதவி துறப்பதாக வெள்ளிக்கிழமை (10) அறிவித்தார். 'கடந்த சில நாள்களாக இடம்பெற்ற மனவேதனையை ஏற்படுத்தும் சில சம்பவங்களை அடுத்தே, நான் பதவி துறக்கிறேன்' என அவர் அறிக்கையொறின் மூலம் தெரிவித்திருந்தார்.

அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் முடிவுகளை எதிர்த்து, அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் பதவி துறக்கும் நிலை ஏற்படுவது, நாட்டுக்கு நல்லதல்ல. இதனை அரசியல் தலைவர்கள் விளங்கிக் கொள்ளாவிட்டால், விரைவில் நாடு இதை விட பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதைத் தடுக்க முடியாது.

## கடிதங்கள்

### மவுஸ்ஸாக்கலை

### நீர்த்தேக்கத்துக்குள் வந்துசேரும் குப்பைகள்

கடந்த சில வாரங்களாக பெய்துவரும் கனமழையின் காரணமாக, மத்திய மலைநாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் கங்கைகள், ஓடைகளில், இருந்து வரும் கழிவு பொருட்கள் மூலம், நீர்த்தேக்கங்களில் அதிகளவு பிளாஸ்டிக் பொருள்கள், கழிவுப் பொருள்கள், உக்காப் பொருட்கள் அதன் கரையோரப் பகுதிகளில் அதிக அளவு வந்து குவிந்துள்ளன .

மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தில் நீரை வழங்கும் மறே ஓயா, காட்மோர் ஓயா, நல்ல தண்ணீர் ஓயா, சாமிமலை ஓயா, சிற்றாறுகள் மவுஸ்ஸாக்கலை நீர்த் தேக்கத்தில் சங்கமிக்கும் பகுதியில் இவ்வாறான கழிவுகள் நிறைந்து காணப்படுகின்றன.

நீர் ஓடைகளிலும், நீர்தேக்கத்துக்கு நீர் வழங்கும் ஆறுகளிலும், கழிவுகளைப் போடுவதால், நீர்த்தேக்கத்தில் வாழும் மீன், ஏனைய உயிரினங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கைகளை எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது. நீர்தேக்கத்துக்குள் வந்து சேர்ந்துள்ள குப்பைகளை அகற்ற, கடற்படையினர், இலங்கை மின்சார சபையின் பாதுகாப்பு பிரிவினர், மவுஸ்ஸாக்கலை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினர், அதிரடிப்படையினர், மஸ்கெலியா பொலிஸார், மீன்பிடி துறையினர் இணைந்து பணியில் ஈடுபட்ட உள்ளனர். எனவே, மலையகத்தில் நீர் ஓடைகளிலும், நீர்தேக்கத்துக்கு நீர் வழங்கும் ஆறுகளிலும், கழிவுகளைப் போடவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

செ. தி. பெருமாள்




## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மெய்நிகர் வழியாக நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:

### 01. ஆய்வுக் கருத்திட்டம்:

மெய்யறிவின் பண்புகளின் ஆற்றல் பற்றிய அளவிடலும் மேம்படுத்தலும் தொடர்பாக, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் புதிய அணுகுமுறைகள் பற்றிய கூட்டு ஆய்வுக் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வுக் கருத்திட்டம் கொழும்பு, பிலிப்பைன்ஸ் டீ லா சால், கனடா வோர்ட்டலு, ஐக்கிய அமெரிக்க வேக் பொரஸ்ட் போன்ற பல்கலைக்கழகங்களால் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. இலக்கைப் பிரகடனப்படுத்தல்:

2030 ஆம் ஆண்டளவில் எமது நாட்டின் மின்சக்தித் தேவையில் அதிகளவு மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எமது நாட்டின் ஒட்டுமொத்த மின்சக்தித் தேவையின் 70 சத வீதமானவை 2030 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கும், 2050 ஆம் ஆண்டாகும் மின்னுற்பத்தியில் முழுமையாக காபன் நீக்கப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது.

சட்டத்தின் திருத்தங்களுக்கமைய இலங்கை மின்சார சபையால் 'குறைந்த செலவில் நீண்டகால மின்னுற்பத்தி திட்டம்' தயாரிக்கப்பட வேண்டும். மின்சக்தி அமைச்சர் பொதுக் கொள்கை வழிகாட்டியொன்று மின்சார சபைக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, குறித்த வழிகாட்டியை வெளியிடுவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. பொறிமுறையைத் தயாரித்தல்:

எமது நாட்டில் காணப்படுவதும், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுமான கனிம வளங்களில், பொருளாதாரப் பெறுமதி கொண்ட கனிமங்கள் கீழ்வரும் 04 பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சக்திவள கனிமங்கள்
இரும்பு உலோக மற்றும் கலப்பு உலோகங்கள் கொண்ட கனிமங்கள்
இரும்புத்தாது அல்லாத கனிமங்கள்
உலோகமில்லாத கனிம வகையைச் சார்ந்த கனிமங்கள்

இவற்றில், இல்மனைற், சர்கோன், ரூடைல், காரியம் போன்ற கனிமப் பொருட்களை அகழ்தல், சுத்திகரித்தல், ஏற்றுமதி செய்தல் போன்ற கருமங்களை, தற்போது கனிம மணல் கம்பனி, கஹடகஹ கிரஃபயிட் லங்கா லிமிட்டட் போன்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

தேசிய இரத்தினக்கல், தங்காபரண அதிகார சபை, இரத்தினக்கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி நிலையம் போன்றன, இரத்தினக்கல், தங்காபரணம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

குறித்த கனிமங்கள் தவிர்ந்த ஏனைய கனிமப் பொருட்களின் பாவனை தொடர்பாக, அரச தலையீடுகள் போதுமானளவு இடம்பெறுவதில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனால், கனிமப் படிமங்கள் காணப்படும் பிரதேசங்கள், குறித்த படிமங்களின் அளவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய உற்பத்திகள் தொடர்பாக விரிவான ஆய்வுக் கற்கையொன்றை மேற்கொள்வதற்காக, துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. குடியியல் வழக்கு திருத்தம்:

பிரதிவாதியின் சிரத்தையின்மையை கருத்தில் கொண்டு, அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பொன்று, 14 நாள்களில் குறித்த சிரத்தையின்மைக்கான நியாயமான காரணங்கள் ஏதும் இருந்தமையை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தலுடன் கூடியதாக நீதிமன்றத்திற்கு பிரதிவாதியால் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளின் அடிப்படையில், நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பை மாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் குடியியல் வழக்குக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ளது.

குறித்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பிரதிவாதியொருவருக்கு தாமதப்படுத்தும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தவும், முறைப்பாட்டாளரின் நியாயமான உரித்தைக் கொண்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு இயலுமை உள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது. அதனால் குறித்த பாதகமான நிலைமையைத் தவிர்ப்பதற்கு இயலுமான வகையில் குடியியல் வழக்குக் கோவை 88(2) ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டது. குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. குடியியல் வழக்குக் கோவை திருத்தம் செய்தல்:

இறுதி விருப்புறுதி ஆவணம் அல்லாத, சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு காணி உறுதி அல்லது ஆவணமொன்றை மேலோட்டமாகப் பார்க்கும் போது, அது சரியான வகையில் சான்றுப்படுத்தியுள்ளமை தெரியவந்தால் மற்றும் மேன்முறையீடு செய்யும் போதும் அல்லது தொடர்ந்தும் மேன் முறையீடு செய்யும் போதும் கையொப்பமிடல் அல்லது அதன் போலித்தன்மை குறிப்பாக குற்றப்பகர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பிரச்சினையாக மேற்கொண்டு வராவிட்டால் அல்லது நீதிமன்றத்திற்கு அவ்வாறான சாட்சிகள் தேவைப்படின் மாத்திரம் அல்லது எழுதி கையொப்பமிடல் மற்றும் அவற்றின் உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்காக முறையான சாட்சிகளை முன்னிலைப்படுத்தத் தேவையில்லை.

எனும் ஏற்பாடுகள் குடியியல் வழக்குக் கோவைக்கு (101 ஆம் அத்தியாயம்) அறிமுகப்படுத்தல் பொருத்தமானதென நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள குடியியல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான குழு பரிந்துரை செய்துள்ளது. அதற்கமைய, குறித்த பணிகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக குடியியல் வழக்குக் கோவைக்கு தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், அதற்காக சட்ட வரைஞர் அவர்கள் சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 06. தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலை:

புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக வெளிச்சுற்று தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம் திட்டமிட்டு, நிர்மாணித்து, நிதி வழங்கி, நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒப்படைத்தல் எனும் அடிப்படையில் வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 03 வருடங்களில் குறித்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளைக் கண்காணிப்பதற்காக சுயாதீன பொறியியலாளர் ஒருவரைக் கொண்ட ஆலோசனை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கான அங்கிகாரத்தையும் அமைச்சரவை வழங்கியுள்ளது.

### 07. இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தல்:

திமோர் - லெஸ்டே (கிழக்குத் திமோர்) அரசாங்கம், இலங்கையுடன் இராஜதந்திர தொடர்புகளை முறையான வகையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விருப்பத்தை இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் பல தற்போது அந்நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. கிழக்குத் திமோருடன் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகவும் அதேபோல் இராஜதந்திர தளங்களில் இலங்கையின் தலையீடுகளில் அந்நாட்டின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதும் முக்கியமாகும் ஆகையால் அந்த அமைச்சரவை பத்திரத்துக்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அலிகார்

# முன்னைய ஆட்சிக்காரர்கள் சிறையிலுள்ளனர்

தற்போதைய மத்திய அரசாங்கம் மக்கள் நலனுக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் செயல்படுகிறது. ஆனால் முந்தைய ஆட்சிக்காரர்கள் நாட்டை கொள்ளை அடித்தனர். இதனால், அதில் பலர் சிறையில் உள்ளனர். உத்தரப் பிரதேச மாநிலத்தில் நடந்த ஒரு விழாவில் பங்கேற்று பிரதமர் மோடி பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்கு உத்தரப் பிரதேசத்தில் செல்வாக்கு மிக்க சமூகமான ஜாட் இனத்தை சேர்ந்த



ராஜா மகேந்திர பிரதாப் சிங் பெயரில் பல்கலைக்கழகம் துவங்கப்பட உள்ளது. அலிகார் மாவட்டத்தில் உள்ள இந்த பல்கலைக்கழகத்தில் 395 கல்லூரிகள் அங்கீகாரம் பெற்று செயல்பட உள்ளன. இந்த பல்கலையின் அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியதாவது:

பாதுகாப்பு துறையில் இறக்குமதியை சார்ந்திருந்த இந்தியா, இன்று பெரிய அளவில் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளது. நாடு மட்டும் அல்லாமல், ஒட்டு மொத்த உலகமும், இந்தியாவில் இருந்து போர் கப்பல்கள், டுரோன்கள், விமான உதிரிபாகங்கள் மற்றும் நவீன குண்டுகள் உற்பத்தி செய்யப்படுவதை பார்க்கின்றன. பாதுகாப்பு துறை சார்ந்த ஏற்றுமதியில், இந்தியா புதிய அடையாளத்தை நோக்கி முன்னேறுகிறது. ஒரு காலத்தில் நிர்வாகத்தை குண்டர்கள் கையில் எடுத்தனர். ஊழல் செய்தவர்களின் கைகளில் ஆட்சி இருந்தது.

தற்போது, அவர்கள் சிறையில் உள்ளனர். உ.பி., வளர்ச்சிக்கு மத்திய அரசாங்கமும் யோகி அரசாங்கமும் இணைந்து பணியாற்றி வருகிறது. மாநிலத்தின் வளர்ச்சிக்கு எதிராக செயல்படும் சக்திகளுக்கு எதிராக நாம் செயல்பட வேண்டி உள்ளது என்றார்.

சென்னை

## மாணவர்களின் உயிரிழப்பு
# அனைவருக்கும் வலியை தரக்கூடியது



"மாணவர்களின் உயிரிழப்பு என்பது அனைவருக்கும் வலியை தரக்கூடியது என, திராவிட முன்னேற்ற கழக மகளிர் அணி செயலாளர் கனிமொழி தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவு தினத்தை யொட்டி சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, சென்னை அண்ணா நகரில் நேற்று நடந்தது. இதில், 500 பேருக்கு உதவிப் பொருட்களை வழங்கி கனிமொழி பேசியதாவது: நீட் தேர்வு இல்லாமலேயே, திறமையான டொக்டர்கள் தமிழகத்தில் இருந்து உருவாகி உள்ளனர்.

வாய்ப்பு அற்றவர்களிடம் இருந்து, வாய்ப்பைப் பறிப்பது தான் நீட் தேர்வு.நீதிமன்றம் மறுத்த விடயங்கள், மத்திய அரசாங்கத்தால் மறுத்த பல விடயங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. அதேபோல, நீட் தேர்வுக்கும் சரியான முடிவு எட்டப்படும். இவ்வாறு திராவிட முன்னேற்ற கழக மகளிர் அணி செயலர் கனிமொழி கூறியுள்ளார்.

பெண்ணாடம்

# எனக்கு மட்டும் ஏன் இரண்டு முறை தடுப்பூசி

பெண்ணாடத்தில் கொரோனா தடுப்பூசி போட வந்த கூலித்தொழிலாளி பெண்ணுக்கு ஒரே நாளில் இரண்டு முறை தடுப்பூசி போடப்பட்ட சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக உறவினர்கள் வாக்குவாதத்தால் பரபரப்பு நிலவியது. கடலூர் மாவட்டம், பெண்ணாடம், இருளர் தெருவைச் சேர்ந்தவர் சுப்ரமணியன் மனைவி லட்சுமி, 42; கூலித் தொழிலாளி. இவர் 'கோவிஷீல்ட்' தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்காக



நேற்று (14) காலை 10.30 மணியளவில், பெண்ணாடம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வந்தார்.

பணியில் இருந்த செவிலியர், கோவிஷீல்ட் தடுப்பூசியைச் செலுத்தி, சிறிது நேரம் அமர வைத்தார். அதன் பின்னர், மீண்டும் அவரை அழைத்து கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்தியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த குறித்தபெண், 'எனக்கு மட்டும் ஏன் இரண்டு முறை தடுப்பூசி போடுகிறீர்கள்' என கேட்டார். அதிர்ச்சியடைந்த செவிலியர், மன்னிப்புக் கேட்டுள்ளார். இதையறிந்த பெண்ணின் உறவினர்கள், மருத்துவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பெண்ணாடம் பொலிஸார் அதிகாரிகளிடம் தெரிவித்து, நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.

பெங்களூர்

## விலைவாசி உயர்வை கண்டித்து
# மாட்டு வண்டியில் சட்டசபைக்கு சென்ற தலைவர்கள்

கர்நாடக சட்டசபை மழைக்கால கூட்டத்தொடர் பெங்களூர் விதான சௌதாவில் நேற்று தொடங்கியது. விலைவாசி உயர்வை கண்டிக்கும் நோக்கத்தில் காங்கிரஸ் மாநில தலைவர் டி.கே. சிவக்குமார், எதிர்க்கட்சி தலைவர் சித்தராமையா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் மாட்டு வண்டிகளில் சட்டசபை கூட்டத்திற்கு வந்தனர். அதாவது டி.கே. சிவக்குமார் சதாசிவநகரில் உள்ள தனது வீட்டில் இருந்தும், சித்தராமையா குமாரபார்க் பகுதியில் உள்ள வீட்டில் இருந்தும் மாட்டு வண்டிகளில் விதான சௌதாவுக்கு வந்தனர்.

இரு தலைவர்கள் வந்த மாட்டு வண்டிகள் விதான சௌதா அருகே ஒன்று சேர்ந்தன. பின்னர் அங்கு சித்தராமையாவின்



மாட்டு வண்டியில் டி.கே. சிவக்குமார் ஏறினார். அந்த மாட்டு வண்டி விதான சௌதாவுக்கு வந்தது. அவர்களை பின்தொடர்ந்து மற்ற தலைவர்களும் மாட்டு வண்டிகளில் வந்தனர். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறியதாக மத்தியஅரசாங்கத்தை கண்டித்து அவர்கள் கோஷங்களை எழுப்பினர். விதான சௌதா வளாகத்துக்குள் மாட்டு வண்டி நுழையவிடாமல் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதற்கு சித்தராமையா கடும் எதிர்ப்பு தெரிவித்தார். மாட்டு வண்டியை விதான சௌதா கட்டிடம் அருகில் வரை செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஆவேசமாக கூறினார். இதையடுத்து பொலிஸார் மாட்டு வண்டியை விதானசௌதாவுக்குள் அனுமதித்தனர். இதனால் அங்கு சிறிது பரபரப்பு நிலவியது.

திருக்கோவிலூர்



# 10 வயது சிறுமியை கடத்தி கூட்டு வல்லுறவு

திருக்கோவிலூர் அருகே, 10 வயது சிறுமியைக் காரில் கடத்திக் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த நான்கு பேரை, பொலிஸ் தேடி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு படிக்கும் 10 வயது சிறுமி. இவரது பெற்றோர், பெங்களூரில் கூலி வேலை செய்து வருகின்றனர். சிறுமி பாட்டியின் பராமரிப்பில் உள்ளார். கடந்த 15 நாள்களுக்கு முன்னர், சிறுமி கடைக்குச் சென்றபோது, காட்டுப்பையூரைச் சேர்ந்தவரும், 25 வயது, 27 வயதுடைய இருவரும் காரில் வந்து, சிறுமியின் வாயைப் பொத்தி, மயக்க மருந்து தடவி முகத்தை மூடிக் கடத்திச் சென்றனர்.

அப்போது, காரின் பின்இருக்கையில் இருவர் இருந்ததை சிறுமி பார்த்துள்ளார். அதன்பின் என்ன நடந்தது என தெரியாத நிலையில், காட்டுப்பையூர் காப்புக்காட்டில் ஆடைகள் கிழிக்கப்பட்டு மயக்க நிலையில் கிடந்தவர், சிறிது நேரத்தில் எழுந்து வீட்டுக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் பெங்களூரில் இருந்து வந்த தன் தாயிடம் சிறுமி, தன்னை கடத்திச் சென்றவர்களையும், அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்தது குறித்தும் கூறியுள்ளார். தாய் புகாரின்படி, திருக்கோவிலூர் அனைத்து மகளிர் பொலிஸார், இவர்களைத் தேடி வருகின்றனர்.

திருப்பூர்

## திருச்சியில்
# 42 அடி உயர ஆஞ்சநேயர் சிலை

திருப்பூர், திருமுருகன்பூண்டியில் உருவாக்கப்பட்ட 42 அடி உயர ஆஞ்சநேயர் சிலை, திருச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டியில் உருவாக்கப்படும் கருங்கல்லால் ஆன திருவுருவங்கள், தமிழகம், வெளி மாநிலங்கள் மட்டுமின்றி, அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் உட்பட பல வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இங்குள்ள ஒரு சிற்ப ஆலையில் உருவாக்கப்பட்ட பிரம்மாண்ட ஆஞ்சநேயர் சிலை, திருச்சி அருகே கொள்ளிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

சிலையை வடிவமைத்த சிற்பி முத்துகுமரன் கூறுகையில்,



"ஊத்துக்குளியில் இருந்து 250 தொன் கல் எடுத்து வந்து, இரண்டு ஆண்டுகளாக 12 சிற்ப தொழிலாளர்கள் உழைப்பில், 42 அடி உயர ஆஞ்சநேயர் சிலையை உருவாக்கினோம். சிலையின் மொத்த எடை 110 தொன். இங்கிருந்து லொறியில் அனுப்பி வைக்கப்பட்டது. விஸ்வரூப ஆஞ்சநேயராக காட்சியளிக்கும் இந்த சிலை, ஸ்ரீரங்கம் - கொள்ளிடம் அருகே தனியார் தோட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அடுத்த மாதம் கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது" என்றார்.

### இலங்கைக்கு எதிரான இரண்டாவது T20

# தென்னாபிரிக்கா வெற்றி



இலங்கைக்கு எதிரான இரண்டாவது சர்வதேச T20 போட்டி, கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றுமுன்தினம் 913) நடைபெற்றது. இதில், 9 விக்கெட்களால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்துவீச்சில் விக்கெட்களை கிடுகிடுவென பறிகொடுத்தது. .

இலங்கை அணிக்கு குசல் ஜனித் பெரேரா மற்றும் தினேஷ் சந்திமால் ஜோடி ஆரம்பத்தில் முதலாவது விக்கெட் 10 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. கடந்த போட்டியில் அரைச்சதம் கடந்து நம்பிக்கை கொடுத்த தினேஷ் சந்திமால் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

குசல் ஜனித் பெரேரா அதிகபட்சமாக 30 ஓட்டங்களை பெற்றார். பானுக்க ராஜபக்ஷ 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி 18.1 ஓவர்கள் நிறைவில் 103 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

104 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தது.

62 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், ரீசா ஹென்ட்ரிக்ஸ் 18 ஓட்டங்களுடன் முதலாவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

குயின்டன் டி கொக் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களைப் பெற்றார். 14.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்று தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. தொடரின் இறுதிப் போட்டி நேற்று (14) நடைபெற்றது.



### போட்டி இரத்தானமைக்கு

## ஐ.பி.எல் காரணம் இல்லை

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ரத்து செய்யப்பட்டதற்கு ஐ.பி. எல். தொடர் காரணம் கிடையாது என்று இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய விராட்கோலி தலைமையிலான இந்திய அணி 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் 4 டெஸ்டுகளில் இந்தியா 2 போட்டியிலும், இங்கிலாந்து ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றது. ஒரு டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இதனால் இந்தியா 2-1 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகித்தது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாக விருந்தது.

இந்திய அணியின் பயிற்சியாளர்கள் 3 பேருக்கும், உதவி பிசியோதெரபிஸ்டுக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டதால் பீதியடைந்த இந்திய வீரர்கள் களம் இறங்க தயக்கம் காட்டியதால் இந்த டெஸ்ட் ரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சவுரவ் கங்குலி அளித்த ஒரு பேட்டியில், ‘இங்கிலாந்தில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள கிரிக்கெட் சபையின் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி (இங்கிலாந்து தொடரில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்) அனுமதி பெறவில்லை. அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டம் எதுவுமில்லை. ஹோட்டல் அறைக்குள் எவ்வளவு நாட்கள் முடங்கியிருக்க முடியும். ஹோட்டல், மைதானத்தை தவிர வேறு எங்கும் செல்லக்கூடாது என்று யாரையும் கட்டுப்படுத்த முடியாது. அப்படி செயல்படுவது என்பது மனிதனால் முடியாத காரியமாகும்” என்றார்

## சுசந்திகாவுக்கு கொரோனா




இலங்கையின் முன்னாள் தடகள வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவையடுத்து தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக அறியமுடிகின்றது.

அவுஸ்திரேலியால சிட்னியில் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் போட்டியில், மகளிருக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார். அதன்பின்னர், அவருக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.எல் கால்பந்து நவம்பர் 19இல் ஆரம்பம்

11 அணிகள் இடையிலான 8 ஆவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடருக்கான முதல் கட்ட போட்டி அட்டவணையை போட்டி அமைப்பு குழுவினர் நேற்று முன்தினம் (13) அறிவித்தனர்.

கோவாவில் உள்ள மூன்று மைதானங்களில் இந்த போட்டி நடைபெறுகிறது. போட்டி நவம்பர் 19 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தொடக்க லீக் ஆட்டத்தில் ஏ.டி.கே.மோகன் பகான்-கேரளா பிளாஸ்டர்ஸ் அணிகள் மோதுகின்றன.

மொத்தம் 115 ஆட்டங்களில் தற்போது முதல் 55 ஆட்டங்களுக்கான (ஜனவரி 9 ஆம் திகதி வரையிலான) அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டு இருக்கிறது.

எஞ்சிய போட்டிக்கான அட்டவணை டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை மட்டும் 2 ஆட்டங்கள் நடக்கிறது. இதில் முதல் ஆட்டம் இரவு 7.30 மணிக்கும், 2 ஆவது ஆட்டம் இரவு 9.30 மணிக்கும் ஆரம்பமாகும்.




### அமெரிக்க ஓபன் போட்டி

## இலக்குடன் விளையாடினேன்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தைச் சேர்ந்த 18 வயதான இளம் வீராங்கனை எம்ரா ரடுகானு சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார்.

மேலும் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தகுதிச்சுற்று வழியே முன்னேறி வந்து வாகை சூடிய முதல் போட்டியாளர் என்ற வரலாற்று சாதனையையும் அவர் படைத்திருந்தார். மேலும் 44 வருடங்களுக்குப் பிறகு கிராண்ட் ஸ்லாம் போட்டியில் பட்டம் வென்ற இங்கிலாந்து வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

மூன்று வாரங்களுக்கு முன்பு, தனது முதல் சுற்று தகுதிப் போட்டி தொடங்குவதற்கு



மூன்று நிமிடங்களுக்கு முன்னதாக தனது ஹேரன்பிரிகளில் ஒன்றை தவறவிட்டுவிட்டார். இதுதொடர்பாக எம்ரா ரடுகானு கூறியதாவது:

“என் அணியில் ஒரு நகைச்சுவை உள்ளது, ஏனென்றால் எனது முதல் சுற்று தகுதி போட்டிக்கு முன், நான் எனது ஹேரன்பிரிகளை இழந்தேன். போட்டி தொடங்குவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னர் ஓய்வறையை சுற்றி ஓடிக்கொண்டிருந்தேன், அப்போது அதை இழந்தேன். அப்போது நான் எனக்குள்ளே இந்த போட்டியில் நீ வெற்றி பெற்றால், நீயே ஒரு ஜோடி ஹேரன்பிரிகளை வாங்கிக் கொள்ளலாம் எனக் கூறிக்கொண்டேன். அது நகைச் சுவையாகிவிட்டது என்றார்.

கடந்த 2002ம் ஆண்டு கனடாவின் டொராண்டோ நகரில் எம்மா ரடுகானு பிறந்தார். அவரது தந்தை ருமேனியாவையும், தாய் சீனாவையும் சேர்ந்தவர்கள்.

வடகொரியா

# கிம் ஜாங் மாதிரி





வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தலைமுடியைப்போன்று தனக்கும் சிகையலங்காரம் செய்ய வேண்டும் என்று சலூன் கடைக்காரரிடம் இளைஞர் ஒருவர் கேட்கும் வீடியோ வொன்று அண்மைக்காலமாக சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

குறித்த இளைஞர் அவ்வாறு சலூன்கடைக்காரரிடம் கேட்டபோது அவர் முதலில் முடியாது எனக்கூறியதாகவும், பின்னர் மனம்மாறி, வடகொரிய ஜனாதிபதியின் தலைமுடியை போன்று, அந்த நபருக்கு சிகை அலங்காரம் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தன்னுடைய தோற்றத்தை கண்ணாடியில் பார்த்த இளைஞனும் சலூன்கடைக்காரரும் வாய்விட்டு சிரிக்கும் வீடியோவொன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

எனினும் இவ்வீடியோவானது எப்போது எங்கு எடுக்கப்பட்டது என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மியான்மார்

## ‘ஆங் சான் சூகிக்கு’ திடீர் உடல்நலக் குறைவு



மியான்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகியை தகவல் தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து வைத்திருந்தமை, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்து சிறை வைத்தது.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இதற்காகஆங் சான் சூகி, தான் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து காரில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன்போது அவர் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார் எனவும், தனக்கு உடல் நலம் சரியில்லை எனத் தெரிவித்ததாகவும் இதனையடுத்து நீதிபதிகள் குறித்த வழக்கு விசாரணையை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் மியன்மாரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், நாட்டில் ஜனநாயகத்தை மீட்டெடுக்கக் கோரியும், சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி நீண்ட நாட்களாக போராட்டங்கள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒஸ்திரியா



## அவசரத்துக்கு சென்றவரால் அவசரமாக தரையிறக்கம்

பயணி ஒருவர் கழிவறையைப் பயன்படுத்தியமையால் விமானமொன்று அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ள சம்பவம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சைப்பிரஸில் இருந்து சுவிட்சர்லாந்துக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்றே இவ்வாறு நடுவானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென ஒஸ்திரியாவின் கிராஸ் (Graz) விமான நிலையத்தில் வைத்து தரையிறக்கப்பட்டுள்ளது. குறித்த விமானத்தில் பயணித்த 51 வயதான ரஷ்ய பயணியொருவர் விமானம் புறப்பட்ட நேரத்திலிருந்து கழிவறைக்குள் சென்று பூட்டிக்கொண்டதாகவும், இதனையடுத்து பயணிகளின் பாதுகாப்புக் கருதி, சந்தேகத்தின் அடிப்படையில் விமானத்தைத் தரையிறக்கியதாகவும் விமானி தரப்பில் கூறப்படுகிறது. இதனையடுத்து ஒஸ்திரியா பொலிஸார் குறித்த பயணியைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பரிசோதனைக்கு உட்படுத்தியதுடன், விமானத்தின் கழிவறையையும் முழுமையாகச் சோதனை செய்ததாகக் கூறப்படுகின்றது,

மேலும் அச்சப்படும் வகையில் அவரிடம் எதுவும் கண்டறியப்படவில்லை என்பதால் அவரை ரயிலில் அனுப்பி வைத்துள்ளதாகவும் ஒஸ்திரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

## காலை ஒருபோதும் வெட்ட மாட்டேன்



அமெரிக்காவின் டென்னசி மாநிலத்தைச் சேர்ந்தவர் பிரபல மொடலான மஹோகனி கெட்டர். 23 வயதான, இவர் ‘லிம்பெடெமா’ (Lymphedema) என்ற ஒருவகை நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். நிணநீர் நாளங்களுக்கு சேதம் ஏற்படும்போது, நிணநீர்த் திரவத்தின் ஓட்டம் தடைப்பட்டு சில உடல் பாகங்களில் வீக்கத்தை ஏற்படுத்துவதால் இந் நோய் ஏற்படுகின்றது. இந் நோயின் காரணமாக அவரது இடது காலின் நிறையானது 45 கிலோ கிராமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் தற்போது இவரின் மொத்த உடல் நிறை 136 கிலோ கிராம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் ”நான் இத்தோற்றத்தில் இருப்பதால் பலரும் என்னைக் கேலி செய்கின்றனர். எனது காலை வெட்டுமாறு கூறுகின்றனர். ஆனால் எனது காலை ஒருபோதும் வெட்ட மாட்டேன், இந்த நோய் குறித்து மக்கள் விளிப்புணர்வுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், என்றார்.

இந்தியா

# வாழையிலை சேலை







இந்தியாவின் திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த சர்பஜித் சர்கார் எனும் இளைஞர் தனது வித்தியாசமான ஆடை அலங்காரத்தால் மக்களை கவர்ந்து வருகின்றார்.

சமூக வலைத்தளங்களில் செல்வாக்கு மிக்க நபரான இவர் இலைகள், காய்கறிகள் மற்றும் பூக்களை ஆடையாக வடிவமைத்து அதனை அணிந்து ‘Neel Ranaut‘ என்ற இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு வருகின்றார். கிராமத்து இளைஞரான இவர் பொலிவூட் தொடக்கம் ஹொலிவூட் வரை உள்ள பல்வேறு பிரபல நடிகைகளின் ஆடைகளை ஒத்த தோற்றத்தில் தனது ஆடைகளை வடிவமைத்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.